
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1203

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

57

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

## கண்ணகி சிலை இடிப்பு
## தமிழ் மானத்துக்கும் மரியாதைக்கும் விடப்பட்ட சவால்!




**2022-23** ஆண்டுக்கான நிதிநிலை விவாதத்தின்போது, 20 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் நடைபெற்ற ஒரு பரபரப்பான நிகழ்வினைச் சட்டமன்ற உறுப்பினர்கள் காரசாரமான விவாதமாக்கினர். 2001-ஆம் ஆண்டில், சென்னை காமராஜர் சாலையில் இருந்த கண்ணகி சிலையை, அன்றைய அ.தி.மு.க. அரசு காரணமில்லாமல் அகற்றியது தொடர்பான அந்த விவாதம், அந்தச் சிலை அமைக்கப்பட்ட வரலாற்றையும், காரணமில்லாமல் இரவோடு இரவாக இடித்து அகற்றப்பட்ட வரலாற்றையும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்டும் வகையில் அமைந்தது.

தமிழ்நாட்டு நலன் சார்ந்த சட்டங்கள், திட்டங்களுக்கு மட்டுமல்ல; மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் காக்கும் இயக்கமாக, தி.மு.கழகம் சட்டப் போராட்டங்களையும், சட்டமன்ற வாதங்களையும் நிகழ்த்தியுள்ளது. அப்படியான வரலாற்றில் இடம்பெற்ற சட்டப்போராட்டம்தான் 'கண்ணகி சிலை இடிப்பு' வழக்கு.

### பேரறிஞர் அண்ணா நிறுவிய சிலை

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 1968-ஆம் ஆண்டில், சென்னை உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தினார். தமிழ்நாடே விழாக்கோலம் கொண்டிருந்த அந்த மாநாட்டின்போது, 'தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்' என உலகுக்குப் பறைசாற்றும் 10 சிலைகளை நிறுவினார். அவற்றில் ஒன்றுதான் கண்ணகி சிலை. 'சிலம்புச் செல்வர்' என்று போற்றப்பட்ட தமிழறிஞர் ம.பொ.சி. அவர்கள், அந்த சிலையினைத் திறந்துவைத்தார்.

கண்ணகி சிலை என்பது வெறும் சிலையல்ல, அதன் பின் உள்ளது தமிழ் உணர்வு என்பதை, தி.மு.கழகத்தின் தொடக்ககாலச் செயல்களில் இருந்தே அறிய முடியும். கண்ணகி வீரப்பெண், கற்புக்கரசி, நீதி கேட்ட காவியநாயகி என்பதற்காக மட்டுமல்ல, தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக நிறுவப்பட்டதன் நோக்கம் முக்கியமானது.

### மேலெழுந்த திராவிட அடையாளங்கள்

திருக்குறளை வெகுமக்கள் மத்தியில் கொண்டு சென்ற இயக்கம் கழகம்தான். அரசியல் மேடைகளில், பொது இடங்களில் திருக்குறளை எடுத்துச்சொல்லி, திருக்குறளைத் தமிழர்கள் பண்பாட்டு அடையாளமாக மாற்றியதில், பெரும்பங்கு கொண்டது தி.மு.கழகம். கழகத்தின் பிரச்சார வடிவங்கள் வழியேதான், 'ஆரியப் புரட்டு' இதிகாசங்களுக்கு மாற்றாகத் தமிழிலக்கிய அடையாளங்கள் பாமர மக்களுக்குச் சென்று சேர்ந்தன.

தமிழ்நாட்டில் இன்றும் சில இடங்களில் திருவிழாக்களில், 'மகாபாரதம்', 'இராமாயணம்' போன்ற புராண நாடகங்கள் நடைபெறுவதைக் காணலாம். இப்போதே இப்படியெனில், பொழுதுபோக்கு வாய்ப்பற்ற காலங்களில் அந்தப் புராண நாடகங்களே, மக்களிடம் கோலோச்சி வந்தன. அப்படியான காலகட்டங்களில் கழகத்தின் மேடைகளில் ஆரிய இதிகாசங்களுக்கு மாற்றாகத் திருக்குறளும் சிலப்பதிகாரமும் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் வழியாகத் தமிழர் அடையாளத்தையும் கொண்டு சேர்த்தனர் கழக முன்னோடிகள். அப்படித்தான் தமிழர் காப்பியமென சிலப்பதிகாரத்தை மக்களிடையே பரப்பினர்.

இராமாயணத்துக்கு மாற்றாக சிலப்பதிகாரம், சீதைக்கு மாற்றாக கண்ணகி என ஆரிய - திராவிட பண்பாட்டு அடையாளத்தை மக்களிடம் கொண்டுசேர்த்து, தமிழர் அடையாளத்தை மீட்டெடுத்தனர். அதன் விளைவே, கையில் சிலம்புடன் மெரினாவில் அமைக்கப்பட்ட கண்ணகி சிலை. தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக 1968-இல் நிறுவப்பட்டது.

கண்ணகி சிலை உருவான மூல வரலாற்றில் இருந்தும் இந்த ஆரிய - திராவிட பண்பாட்டுப் போருக்கான விடை உள்ளது. தமிழினத்தை இகழ்ந்து பேசிய கனகவிசயர் எனும் பார்ப்பன அரசர்களின் ஆணவம் அடக்கி, அவர்கள் தலையிலே கல் ஏற்றி வந்து, அந்தக் கல்லாலேயே கண்ணகிக்குச் சிலை எடுத்தான் சேர மன்னன் செங்குட்டுவன் என எழுதி இருக்கிறார் பேரறிஞர் அண்ணா. சரியாகச் சொல்வதானால், தமிழினம் பார்ப்பன ஆணவத்தை அடக்கிய வரலாற்று அரசியல் அடையாளம்தான் கண்ணகி சிலை. அதனால்தான், தமிழுக்குப் பெருமை சேர்த்த, தொண்டு செய்த தமிழறிஞர்களின் சிலைகளோடு கண்ணகி சிலையையும் சேர்த்து அமைத்தார் பேரறிஞர் அண்ணா.

> 'தமிழர்களின் பண்பாட்டு அடையாளம்' என உலகுக்குப் பறைசாற்றும் 10 சிலைகளை நிறுவினார். அவற்றில் ஒன்றுதான் கண்ணகி சிலை.

அந்தச் சிலையைத்தான் அகற்றினார் அம்மையார் ஜெயலலிதா. தமிழர்களின் பண்பாட்டு அடையாள அகற்றமாக, அன்றைக்கு அரசியல் அரங்கில் அதனை விவாதமாக்கியவர் கலைஞர்.

2001-ஆம் ஆண்டில், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அம்மையார் ஜெயலலிதா, வழக்கம்போல தனது மூடநம்பிக்கைகள், வறட்டுத்தனங்களுக்கு ஏற்ப, ஆட்சியின் தொடக்கத்தில் இருந்தே அலங்கோலமாக்கினார்.

டான்சி நில பேர வழக்கில் தண்டனை பெற்றிருந்த அவர், முதலமைச்சராகப் பொறுப்பேற்றது செல்லாது என்கிற நிலையில், பதவி விலகினார். மீண்டும் டிசம்பர் மாதம் பதவி ஏற்ற நிலையில், சட்டமன்றத்துக்குச் செல்லும் வழியில் தலைவிரிகோலமாக கண்ணகி சிலை நிற்பது சரியில்லை என ஆரூடம் சொல்லப்பட, அந்தச் சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

வாஸ்து முறைப்படி ஆட்சியாளர்களுக்குச் சரியாக இல்லை எனவும், கோபத்துடன் கண்ணகி விரல் காட்டுவதைப் போல சிலை இருந்ததால், முதலமைச்சராக இருந்த அம்மையாரின் முயற்சிகள் தடைபடுவதாகவும் ஆரூடங்கள் கூறப்பட்டதாகச் செய்திகள் கூறின.

### இரவோடு இரவாக அகற்றம்

அதற்கேற்ப, டிசம்பர் 12-ஆம் தேதி நள்ளிரவு நேரத்தில், சிலையின் பீடத்தில் வாகனம் மோதி சேதமடைந்த நிலையில், அதைச் சரிசெய்வார்கள் என எதிர்பார்த்திருந்த நிலையில், 13-ஆம் தேதி மதியத்தில், எந்த அறிவிப்பும் இல்லாமல் கண்ணகி சிலை அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு, பொதுப்பணித்துறை அதிகாரிகள் அந்தச் சிலையை எடுத்துச் சென்றுவிட்டனர். இரவோடு இரவாக அந்த இடத்தில் சாலை அமைத்து, சிலை இருந்ததற்கான அடையாளத்தையே மாற்றிவிட்டனர்.

கண்ணகி சிலை அகற்றப்பட்ட தகவல் அறிந்ததும், தமிழார்வலர்களும் மக்களும் கொதித்தெழுந்து அம்மையார் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை அறிவித்தனர். "தமிழர்களின் மானத்துக்கும் மரியாதைக்கும் விடப்பட்ட அறைகூவல் என்றும், அந்தச் சிலையை உடனடியாக அதே இடத்தில் வைக்க வேண்டும்" என்றும் அறிக்கை விடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அந்தச் சிலையை வேறு இடத்தில் வைக்கத் திட்டமிடுகிறார்கள் என்பதை அறிந்து, அதைத் தடுக்க உடனடியாக சென்னை, உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வழிகாட்டினார். அந்த வழக்கில், நீதிபதி சுபாஷன் ரெட்டி மற்றும் நீதிபதி சிவசுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய அமர்வு, 'வழக்கு விசாரணை முடியும் வரை கண்ணகி சிலையை, வேறு இடத்தில் நிறுவக்கூடாது' என உத்தரவிட்டனர். இதற்கிடையில், டிசம்பர் 22-ஆம் தேதி, அண்ணா அறிவாலயத்தில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், தமிழ்ச் சான்றோர்களின் கூட்டத்தைக் கூட்டினார் கலைஞர்.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 5.1.2002 அன்று, சென்னை கடற்கரை, சீரணி அரங்கில் கலைஞர் தலைமையில் மாபெரும் மாநாடு நடைபெற்றது. அனைத்துக் கட்சியினர் மற்றும் தமிழ்ச் சான்றோர் என்று பலரும் பேசிய மேடையில், நிறைவுரையாற்றிய கலைஞர், "கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவும் வரை தமிழர்களின் போராட்டம் ஓயாது" என்று உறுதி அளித்தார்.

...தொடரும்

## சுயமோகிகளால் மதிப்பிட முடியாது!

அ.தி.மு.க.வில் உடைப்பை ஏற்படுத்தி, ஒரு பிரிவு விஜய் அரசை ஆதரிப்பதோ, அ.ம.மு.க.வின் ஒற்றை எம்.எல்.ஏ.வும் விலைபோய்விட்டதாக அக்கட்சித் தலைவர் டி.டி.வி.தினகரன் கூறியிருப்பதோ, இதுவரை விவாதமாகவே இல்லை. ஆனால், நடக்காத வேறொன்றைப் பற்றியே திட்டமிட்டு விவாதங்கள் கட்டமைக்கப்படுகின்றன.

இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள பத்திரிகையாளர் கோவி.லெனின், "தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, எத்தகைய அரசியல் சூழல் உள்ளதோ அதற்கேற்ப, எல்லாக் கட்சிகளுமே அவரவருக்கான வியூகங்களை வகுப்பதும், இறுதியாகத் தங்கள் நிலைப்பாட்டிற்கேற்ப உறுதியான ஒரு முடிவை எடுப்பதும் தொடர்ந்து நிகழ்வதுதான். 1989-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், அதிக இடங்களில் வென்றது, ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி. ஆனால், அதற்கு தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை. ஜனதா தளத்தை உள்ளடக்கிய தேசிய முன்னணி, அடுத்த இடத்தில் இருந்தது. பா.ஜ.க. 85 இடங்களுடன் மூன்றாவது இடத்தில் இருந்தது. அது, தேசிய முன்னணியை ஆதரித்தது. அப்போதைய சூழலில், காங்கிரஸ்தான் பெரிய எதிரி-அதிக தீமை என்ற முடிவுடன், வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆதரவளித்தன.

1996-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், அதிக இடங்களை பா.ஜ.க. வென்றது. ஆனால், அதற்கு மெஜாரிட்டி இல்லை. பிரதமராகப் பொறுப்பேற்ற வாஜ்பாய் 13 நாட்களில் பதவியிழந்தார். அப்போது, பா.ஜ.க.தான் இந்தியாவுக்குப் பெரிய தீமை, நாட்டுக்கு முதன்மையான எதிரி என்ற முடிவுடன், ஐக்கிய முன்னணியை ஆட்சியில் உட்கார வைத்து, காங்கிரஸும் கம்யூனிஸ்ட்டுகளும் ஆதரித்தன. 1998-ல் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து, ஆட்சியிலும் பங்கெடுத்த அ.தி.மு.க., 13 மாதங்களில் அந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு காங்கிரஸ் ஆட்சியமைக்க ஆதரவு தெரிவித்தது. அப்போது, பா.ஜ.க.வுக்கு தி.மு.க. ஆதரவளித்தது. தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, பலவித ஆலோசனைகள் நடைபெறுவது ஜனநாயகத்தில் இயல்பு. அவையெல்லாம் ஏற்கப்பட்டனவா - நிராகரிக்கப்பட்டனவா? அதிகாரபூர்வமான நிலைப்பாடு என்ன? இறுதியாக எடுத்த முடிவு என்ன? என்பதுதான் நிலையானது. முணுமுணுப்புகள், கிசுகிசுப்புகள் எதுவும் இறுதி முடிவாகிவிடாது. நிதானமான அலசல்தான் இறுதியான உறுதியான முடிவைத் தரும்.

சுயமோகிகளால் நிதானமாக எதையும் மதிப்பிட முடியாது. தங்கள் பிம்பமும் தாங்கள் உருவாக்குகிற பிம்பமும் நொறுங்கிவிடும் என்ற பதற்றம்தான் அதற்கு காரணம்" என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





### தலைவர் இரங்கல் கவிதையும் பணியிழப்பும்!



செல்வராணி ராமச்சந்திரன்

நான் காவல் துறையில் பணியில் இருக்கும்போது, 'காக்கிச் சட்டைக்குள் ஒரு கவிஞர்' என்று அழைக்கப்பட்டிருக்கிறேன். 25 ஆண்டுக் காலம் நான் காவல் துறையில் பணிபுரிந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மறைவின்போது, ஓர் இரங்கல் கவிதை வாசித்ததற்காக, நான் மிகவும் நேசித்த காவலர் பணியில் இருந்து நீக்கப்பட்டேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், எங்கள் வீடு தேடி வந்து என்னையும் என் கணவரையும் என் குழந்தைகளையும் அழைத்து அருகில் அமரவைத்து, "தலைவருக்காக வேலையை விட்டுவிட்டோமே என்று கலங்க வேண்டாம், அண்ணன் நான் இருக்கிறேன்" என்று ஆறுதல் கூறிய அந்த நாளை, என் தமிழின் தவமாகவே கருதுகிறேன்.

- கவிஞர் கவி செல்வா (எ) செல்வராணி ராமச்சந்திரன்,
முன்னாள் சிறப்பு உதவி ஆய்வாளர், திருச்சி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வரு கருவூலம்

### மிசா கைதிகள் விடுதலை!

1977-ஆம் ஆண்டு ஜனவரி 18 அன்று, இந்தியாவில் நெருக்கடி நிலை தளர்த்தப்பட்டது. நெருக்கடி நிலை தளர்த்தப்பட்ட பின்பும், ம.பி., உ.பி., பீகார், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கானோர் மிசா கைதிகளாகச் சிறையில் இருந்தனர். தமிழ்நாட்டிலும் மிசா கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படாமல் இருந்தனர். அன்றைக்கு ஆளுநராக இருந்த சுகாதியாவைச் சந்தித்து, மிசா கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தினார் கலைஞர். அதையடுத்து, ஜனவரி 22 முதல் பிப்ரவரி 2 வரை கைதிகள் ஒவ்வொருவராக விடுதலை செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900